மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாயூரத்தில் தான் அந்த ரேடியோகிராஃபர் இருக்கிறார். டாக்டர் கஸ்தூரிரங்கன் என்ற பெயருள்ள அந்த ரேடியோ கிராஃபர் கொஞ்ச நாள் விடுமுறையில் சென்றிருந்தார். அவர் மொத்தமாக விடுமுறை எடுக்காமல், கொஞ்சங் கொஞ்சமாக 5 நாள், 10 நாள், 15 நாள் என்று விடுமுறை எடுத்த காரணத்தால், அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்க முடியாமல் போய்விட்டது. இப்பொழுது அவருடைய விடுமுறை முடிந்துவிட்டது. அவரே மீண்டும் பதவிக்கு வந்துள்ளார். இடையிலே அந்த மூன்று மாதங்களுக்குத்தான் முக்கிய அவசரமான கேஸ்களைப் பொறுத்து ரேடியாலஜிகல் எமர்ஜன்ஸி எக்ஸ்ரேஸ் இவைகளையெல்லாம் அந்தந்தப் பெரிய மருத்துவ மனைகளில், ரேடியாலஜி பிரிவு இருக்கும் இடங்களில் கொண்டு போய் அவர்களுக்குப் பரீட்சை செய்துகொண்டு வரப்பட்டது. சிறிய சிறிய கேஸ்களுக்கெல்லாம் திருவாரூரிலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும் அவர்கள் அந்த கருவிகளையே இங்கே கொண்டுவந்து அவர்களுக்குப் பரிசீலனை செய்யப்பட்டது. விடுப்பிலே சென்றிருந்த டாக்டர் கஸ்தூரிரங்கன் என்பவர் இப்பொழுது மீண்டும் பணிக்கு வந்துவிட்ட காரணத்தால் இப்பொழுது மாயூரத்தில் அத்தகைய நெருக்கடி எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து கேள்வி எண் 517. திரு. சித்தன் அவர்களுடைய கேள்விக்கு மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்கள் விடை அளிப்பார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : கேள்வி எண். 516-க்கு ஒரு துணைக் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு கேள்விக்கு வந்தாகிவிட்டதே.

Drinking water schemes for Madurai district.

*** 517 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :**

a) The details of the drinking water supply schemes proposed to be implemented during Fourth Plan period in Madurai district and

(*b*) the estimated expenditure therefor ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) அண்டு (இ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : திருமங்கலம் குடிநீர்த் திட்டம் ஏற்கனவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதாக இருந்தது; என்ன காரணத்தினாலோ அது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இனிமேல் வருகிற திட்டத்திலாவது சேர்த்துக்கொள்ளப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திருமங்கலம் குடிநீர்த் திட்டம் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. மதுரைக்கு வைகையிலிருந்து தண்ணீர் கொண்டுவருகிற திட்டம், பழனி குடிநீர்த் திட்டம், தேனி, திண்டுக்கல், கொடைக்கானல் டௌன் ஷிப், மேலூர் பஞ்சாயத்து, ஆகிய இவைகளைப் பற்றித் தான் குறிப்பு இருக்கிறதே தவிர, திருமங்கலத்தைப் பற்றிக் குறிப்புகள் இருக்கவில்லை.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, may I know the tota amount set apart in the Fourth Plan for our State for the supply of drinking water ?

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : It is proposed to take up only 31 new water-supply and water-supply augmentation schemes and a provision of Rs. 12 crores and 50 lakhs have been scheduled for this purpose. So, out of these schemes only one scheme has been taken up in the Madurai district and that is 'Ottanchatram'.

1969 மார்ச் 28]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, திண்டுக்கல் குடி நீர் திட்டத்திற்குச் சென்ற ஆண்டே ஏற்பாடு செய்யப்பட்டது. இன்னும் அந்த வேலை ஏன் துவக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து.: திண்டுக்கல் பகுதிக்கு ஏறத்தாழ 12 இலட்சம் 67 ஆயிரம் ரூபாய் செலவழித்து ஒரு திட்டம் நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால், அதை இன்னும் நிறைவேற்றவில்லை. சர்விஸ் ரிசர்வாயர் என்கின்ற அந்தத் தேக்கம் கட்டப்பட்டு வருகிறது. அது முடிந்துவிட்ட பிறகு தண்ணீர் விநியோகிக்க முடியும்.

திரு. பி. துரைராஜ் : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் புளியங்குடி நகரில் குடி தண்ணீருக்கு எவ்வளவு திண்டாட்டம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே நேரில் பார்த்திருப்பதால் நன்றாக அறிவார்கள். அந்த நகரத்திற்குக் குடி தண்ணீர்த் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு ஏதாவது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அனுமதி அளிக்கப்பட்டிருந்தால், அதைக் கூடிய விரைவில் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் ஏற்கனவே சொன்னேன். 12 கோடி 50 இலட்ச ரூபாய் செலவில் 31 புதிய திட்டங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று. நெல்லை மாவட்டத்தில் இருக்கும் திட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்பதை நான் இப்பொழுது உறுதியாகச் சொல்லமுடியாது.

நாககுப்பத்துக்கு உயர்நிலைப் பள்ளி

***518 வினா —திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கள்ளக்குறிச்சி வட்டம் நாகக்குப்பம் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி துவக்கப்படவேண்டுமெனக் கோரிக்கை கிடைக்கப்பெற்றதா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு கோரிக்கை கிடைக்கப் பெற்றது அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1967–68, 1968–69-ம் ஆண்டுகளில் பெறப்பட்டது. அது தள்ளி வைக்கப்பட்டது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : நாக குப்பத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே அவர்கள் பணம் கட்டியிருக்கிறார்கள். பணத்தோடு சேர்த்து ஒரு கட்டடமும் கொடுப்பதற்கு அங்கிருப்பவர்கள் வாக்குறுதி அளித்தும் எந்தக் காரணத்தால் அந்த உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்படவில்லை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இடத்தில் உயர்நிலைப் பள்ளி தேவையில்லை என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பின்னால் சட்டமன்ற உறுப்பினர் திரு. கேசவலு அவர்கள் அதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் அதே போல் இயக்குனர் இந்த ஊரில் பள்ளிக்கூடம் வைப்பது பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது.